## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி - 2014

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பொதுப் பேரேட்டுக் கணக்குகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை வெளிப்படுத்தும் விதத்தில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 இல் 9 சதவீத வட்டியில் அரசாங்கத்திடமிருந்து ரூபா 250,000,000 தொகையான கடனொன்று பெறப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 வரை திறைசேரிக்கு முதலோ அல்லது வட்டியோ மீள்கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 134,321,918 கூட்டுமொத்தத் தொகையான வட்டி 2006 வரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2007 முதல் 2014 வரையான காலத்திற்கான கணக்குகளில் ரூபா 180,000,000 கூட்டுமொத்தத் தொகையான வட்டிக்காக எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 யூலை 01 தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது வாடிக்கையாளர்களால் ஹம்பகா கிளையில் வைப்புச்செய்யப்பட்ட ரூபா 7,063,376 கூட்டுத்தொகையானது கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) கண்டி கிளையால் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 13,731,140 தொகையான கடன் தவணைப்பணம் (தோட்டம்) உரிய கணக்குகளிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அதனால் வருமானம் மற்றும் கடன் மீதிகளானது முறையே ரூபா 5,574,509 மற்றும் ரூபா 6,157,031 ஆல் குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வசூலிக்கின்ற காசோலைகள் கணக்கில் பதிவு செய்தலில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக வரவு மீதி காணப்பட்டது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்கள் ரூபா 22,810,493 ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் கணக்கிலுள்ள கடன் நிலுவை மீதியானது 2006 இலிருந்து தீர்க்கப்படாது ரூபா 2,841,347 தொகையானது முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(எ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹம்பகா கிளையின் வசூலிக்கின்ற காசோலைகள் கணக்கு- 004/1/09/1607 இல் இருந்த ரூபா 1,122,255 மீதியானது வங்கியால் இணக்கம் செய்யப்பட்டிருந்தபோதிலும் , 2014 திசெம்பர் 31 வரை கணக்குகளில் அது தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கிளைகளின் நடைமுறைக் கணக்கிற்கும் கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கிற்கும் இடையில் ரூபா 18,580,615 ஆன இணக்கம் செய்யப்படாத ஆரம்ப வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன..

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் , ஒதுக்கீடற்ற கணக்குகள், நிலையான வைப்புக்கள் போன்றவற்றிற்கு எதிரான கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் உருவாக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 69,963,530 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு தொடர்பில் பேரேட்டு மீதிகளுக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டு மீதிகளிற்கும் இடையில் முறையே ரூபா 648,772 மற்றும் ரூபா 326,282 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**2.2.4. இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதிவரையிலும் ரூபா 1,137,732 கூட்டுமொத்தத் தொகையான வைப்புக்கள் இனங்காணப்படாத வைப்புக்களாகக் இருந்தன.

(ஆ) ரூபா 4,209,582 மீதியானது இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படாமல் முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(இ) தலைமை அலுவலக காசோலை கணக்குகளை காசாக்கல் தொடர்பிலான ஏனைய பொறுப்புக்களாக நிதிக்கூற்றில் காட்டப்பட்ட ரூபா 2,165,961 இனங்காணப்படாத தொகையானது ஒரு வருடத்திற்கு மேலாக கணக்குகளில் இனங்காணப்பட்டும் இணக்கம் செய்யப்பட்டுமிருக்கவில்லை.

2.2.5. **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 21,056,587 தொகையான சேகரிப்புகளிற்காக அனுப்பப்பட்ட காசோலைகள், சேகரிப்புகளின் மீதான காசோலை வருமதிகள், நிலையான வைப்புக்கள் வருமதிகள், கிளை ஆலோசனை கணக்குகள்- ஏனைய சொத்துக்கள் மற்றும் கிளை ஆலோசனை கணக்குகள்- ஏனைய பொறுப்புக்கள் என்பன தொடர்பிலான விபரமான பட்டியல்கள் மற்றும் இணக்ககூற்றுக்கள் கணக்காய்விற்காக கோரப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 06 ஆம் இலக்க நிதி கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் அதிகாரச்சட்டம் | கிரிபத்கொட மற்றும் கேகாலை கிளைகள் தொடர்பிலான ரூபா 3,800,000 பெறுமதியான பதினேழு "உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளல்" பெயரிலான படிவங்கள் சரியாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 213 ஆம் பிரிவு | கிரிபத்கொட மற்றும் கேகாலை கிளைகளானது பிடித்துவைத்தல் வரி வருமானத்தை குறித்ததிகதியில் உள்நாட்டு இறைதிணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வங்கியானது பின்வரும் கடன் நீண்டகாலம் நிலுவையாகவுள்ள சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அவற்றின் காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளன. |

| வங்கி கணக்கு இலக்கம் | 06 முதல் 12 வரையான மாதங்கள் | 01 முதல் 02 வரையான வருடங்கள் | 02 முதல் 03 வரையான வருடங்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| A | 80,000 | 447,041 | - |
| B | 2,930 | 17,150 | - |
| C | 67,300 | 261,112 | 62,975 |

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 507 | 2014 ஆம் ஆண்டிற்கான இருப்பு விடயங்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 754 | வங்கியானது மீளாய்வாண்டின் போது ரூபா 67,544,820 பெறுமதியில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்திருந்த போதிலும் இருப்புக்களின அசைவானது சரியாக நாளதுரையாக்கக்கப்படவில்லை. |

(ஈ) உள்ளகச் சுற்றறிக்கைகள

| | |
|---|---|
| (i) பதில்பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட 2014 நவம்பர் 14 ஆந் திகதிய 559 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு கிளைகள் தொடர்ந்து வரும் மாதம் முடிவடைந்து ஒரு கிழமைக்குள் 15 மோட்டார் சைக்கிள்களின் ஓட்ட அட்டவணையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் போக்குவரத்து பிரிவுக்கு அனுப்பியிருக்கவில்லை |
| (ii) பிரதம முகாமையாளரால் (கிளை செயற்பாடுகள்) வழங்கப்பட்ட 2014 மார்ச் 25 ஆம் திகதிய கடிதம் | வங்கியானது செயற்பாடற்ற கணக்குகளிற்காக எந்தவித பதிவேடுகளையும் பேணியிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான வங்கியின் செயற்பாடுகளை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபமான ரூபா 342.74 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வரிக்கு முந்திய தேறிய இலாபமான ரூபா 412.71 மில்லியனை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 69.97 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டியது.

முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மீதிகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வட்டி செலவினம் மற்றும் அழிவு நட்டங்களானவை முறையே 10 சதவீதத்தாலும் 38 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்த அதேநேரம், முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மீதிகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு வருமானம் 10 சதவீதத்தால் அதிகரித்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக அமைந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 வங்கியின் இலாபத்தன்மை

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கும் முன்னைய 5 ஆண்டு காலப்பகுதிக்குமான வங்கியின் இலாபத்தன்மை கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| (i) | வட்டி வருமானம் | 3,633 | 3,635 | 2,879 | 2,611 | 2,362 | 2,165 |
| (ii) | வட்டிச் செலவினம் | 2,214 | 2,459 | 1,725 | 1,214 | 1,368 | 1,939 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (iii) | தேறிய வட்டி வருமானம் | 1,419 | 1,176 | 1,153 | 1,397 | 994 | 226 |
| (iv) | ஏனைய செயற்பாட்டு வருமானம் | 103 | 97 | 73 | 76 | 387 | 505 |
| (v) | ஏனைய வருமானம் இலாபம்/( நட்டம்) | (23) | (48) | 7 | -- | 1 | 2 |
| (vi) | தேறிய செயற்பாட்டு வருமானம் | 1,499 | 1,225 | 1,233 | 1,473 | 1,382 | 733 |
| (vii) | மொத்த மீண்டெழும் செலவினம் | (1,086) | (882) | 803 | 785 | 743 | 613 |
| (viii) | வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 413 | 343 | 430 | 688 | 639 | 120 |
| (ix) | வரி | (140) | (110) | 158 | 178 | 179 | 46 |
| (x) | வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் | 273 | 233 | 272 | 510 | 460 | 74 |
| (xi) | விற்பனைக்காக கிடைத்த சொத்துக்கள் மீதான நட்டங்கள் | 3 | 1 | 2 | 3 | - | - |
| (xii) | வரையறுக்கப்பட்ட நலன்புரி திட்டங்கள் (+/-) மீதான உண்மையான இலாபம்/(நட்டங்கள்) | (102) | | | | | |
| | மொத்த திரட்டிய வருமானம் | **174** | **234** | **270** | **507** | **-** | **-** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- ❖ 2009 - 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,165 மில்லியனிலிருந்து ரூபா 3,635 மில்லியன் வரை அல்லது 68 சதவீதத்தால் வட்டி வருமானம் அதிகரித்திருந்த அதேநேரம் மீளாய்வாண்டின் போது ரூபா 3,633 மில்லியனிற்கு குறைந்திருந்தது. 2009 - 2012 ஆம் ஆண்டின் போதான வட்டிச் செலவினம் ரூபா 1,939 மில்லியனிலிருந்து ரூபா 1,214 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. அதே வேளையில் இது 2013 இல் ரூபா 2,459 மில்லியனிற்கு அதிகரித்திருந்த அதேநேரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 2,214 மில்லியனிற்கு அல்லது 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

- ❖ 2009 – 2011 ஆண்டின் போது ரூபா 120 மில்லியனிலிருந்து ரூபா 688 மில்லியனிற்கு அல்லது 473 சதவீதத்தால் வரிக்கு முந்திய தேறிய இலாபம் அதிகரித்திருந்தது அதேநேரம், 2012 – 2013 ஆண்டின் போது ரூபா 430 மில்லியனிலிருந்து ரூபா 343 மில்லியனாக அல்லது 20 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம், 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது

மீளாய்வாண்டின் போது ரூபா 343 மில்லியனிலிருந்து ரூபா 413 மில்லியனாக அல்லது 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

❖ 2009 – 2011 காலத்தின் போது ரூபா 74 மில்லியனிலிருந்து ரூபா 510 மில்லியனாக அல்லது 589 சதவீதத்தால் வரிக்கு பிந்திய தேறிய இலாபம் அதிகரித்திருந்தது. அதன் பின்னர் 2012 – 2013 காலத்தின் போது ரூபா 272 மில்லியனிலிருந்து ரூபா 232 மில்லியனாக அல்லது 15 சதவீதத்தால் வரிக்கு பிந்திய தேறிய இலாபம் குறைவடைந்திருந்தது. அதேநேரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 233 மில்லியனிலிருந்து ரூபா 273 மில்லியனாக அல்லது 17.16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

❖ 2011 தொடக்கம் 2014 வரையான காலத்தின் போது மொத்த திரட்டிய வருமானம் ரூபா 507 மில்லியனிலிருந்து ரூபா 174 மில்லியனாக அல்லது 66 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 6 ஆண்டுகளின் போதான வங்கியின் முக்கியமான சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|
| | % | % | % | % | % | % | % |
| <u>இலாபத்தன்மை விகிதங்கள்</u> | | | | | | | |
| i. தேறிய வட்டி எல்லை | 4.97 | 4.76 | 5.39 | 7.26 | 7.87 | 4.45 | 3.48 |
| ii உரிமை மூலதனத்தில் வருவாய் | 6.87 | 6.00 | 7.31 | 14.67 | 18.46 | 3.06 | 0.88 |
| iii சராசரிச் சொத்துக்களில் வருவாய் | 1.44 | 1.39 | 2.01 | 3.58 | 3.77 | 0.77 | 0.38 |
| <u>போதிய மூலதன விகிதங்கள்</u> | | | | | | | |
| i உரிமை மூலதனம் / மொத்தச் சொத்துக்கள் | 13.26 | 14.65 | 17.04 | 17.76 | 15.40 | 14.06 | 16.51 |
| ii உரிமை மூலதனம் / கடன்கள் | 16.56 | 18.38 | 20.66 | 22.34 | 19.35 | 17.53 | 18.13 |
| iii தட்டு I | 25.32 | 28.09 | 33.22 | 39.94 | 26.09 | 24.18 | 27.81 |
| iv தட்டு II | 25.32 | 28.09 | 33.22 | 39.94 | 26.09 | 24.82 | 27.81 |
| <u>திரவ விகிதங்கள்</u> | | | | | | | |
| i. திரவச் சொத்துக்கள் / வைப்புக்கள் (பொறுப்புக்கள்) | 22.79 | 21.24 | 21.98 | 20.04 | 21.14 | 26.04 | 12.84 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ii வைப்புக்கள்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 99.52 | 99.18 | 93.40 | 92.51 | 90.99 | 91.41 | 76.96 |
| iii கடன்பெறல்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 4.61 | 4.21 | 3.98 | 4.10 | 4.25 | 5.18 | 5.84 |

வங்கியானது மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு 5 சதவீதம் மற்றும் 10 சதவீதம் தட்டு I மற்றும் தட்டு II இல் போதிய மூலதன விகதித்தின் ஆகக் குறைந்த எல்லையை பேணுவதில் நல்ல முன்னேற்றம் உள்ள போதிலும் இரண்டு விகிதங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு இறுதியில் குறைவடைந்திருந்ததுடன் கடந்த ஆறு ஆண்டுகளிற்காக குறைந்த விகிதங்களை பதிவுசெய்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்பாடற்ற கடன் (என்பிஎல்)

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவிருந்த கடன் மற்றும் அவற்றில் செயற்பாடற்ற கடன்கள் என்பவற்றின் நிலைமையை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| **கடன் வகை** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவுள்ள கடன் மீதி** | **செயற்பாடற்ற கடன் மீதி** | **மொத்த நிலுவையாகவுள்ள கடன் மீதியின் சதவீதமாக செயற்பாடற்ற கடன்கள்** |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| ஈட்டுக் கடன்கள் | 8,126 | 914 | 11.25 |
| ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 9,958 | 5,439 | 54.62 |
| தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 955 | 691 | 72.36 |
| தனிப்பட்ட கடன்கள் | 2,059 | 322 | 15.64 |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 78 | 7 | 8.97 |
| முதலீட்டு நிதியம் | 155 | 11 | 7.09 |
| மீள்நிதியிடல் கடன்கள் | 503 | 29 | 5.76 |
| **மொத்தம்** | **21,834** | **7,413** | **33.95** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னைய ஆண்டிற்கான செயற்பாடற்ற ஈட்டுக் கடன்கள், ஊசேநி கடன்கள், தோட்டத்துறை ஊசேநி கடன்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் மோட்டார் வாகனக் கடன்கள் தொடர்பான வீதங்கள் முறையே 12.69 சதவீதம், 57.4 சதவீதம், 73.9 சதவீதம், 18.83 சதவீதம் மற்றும் 4.27 சதவீதமாக இருந்தன ஆகையால் இது ஒரு குறைவடையும் போக்கை சுட்டிக் காட்டியது.

**(ஆ) நிலுவையாகவுள்ள் கடன்களின் காலப்பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஈட்டு, ஊழியர் சேமலாப நிதியம், தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதிய கடன்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் மோட்டார் வாகனக் கடன்கள் என்பவற்றின் காலப்பகுப்பாய்வை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| நிலுவைக் காலம் | ஈட்டுக் கடன்கள் | ஊசேநி கடன்கள் | தோட்டத் துறை ஊசேநி கடன்கள் | தனிப்பட்ட கடன்கள் | வாகனக் கடன்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **மாதங்கள்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 1 மாதத்திற்கு குறைவான | 5,155 | 3,372 | 55.88 | 1,451 | 60.5 | 10,094.38 |
| 1 - 2 | 2,298 | 1,320 | 43.3 | 368 | 11.3 | 4,040.60 |
| 3 - 5 | 391 | 615 | 257.75 | 114 | 2 | 1,379.75 |
| 6 - 11 | 120.3 | 1,394 | 242.82 | 74 | 2.5 | 1,833.62 |
| 12 - 17 | 71.3 | 3,198 | 353.84 | 41.5 | 2.4 | 3,667.04 |
| 18உம் அதற்கு மேலும் | 90.4 | 59 | 2.22 | 11 | - | 162.62 |
| மொத்தம் | **8,126** | **9,958** | **955.81** | **2,059.50** | **78.7** | **21,178.01** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மொத்த ஊழியர் சேமலாப நிதிய கடன்கள் மற்றும் தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதிய கடன்களில் முறையே ரூபா 3,257 மில்லியன் அல்லது 33 சதவீதம் மற்றும் ரூபா 356 மில்லியன் அல்லது 37.25 சதவீதம் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையில் இருந்தது.

**(இ) ஈட்டு, ஊழியர் சேமலாப நிதியம், தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் தொடர்பாக கடன் வழங்கல் நிலைமை**

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ஈட்டு, ஊழியர் சேமலாப நிதிய, தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் தனிப்பட்ட கடன்கள் , வாகனக் கடன்கள் , மீள்நிதியிடல் கடன்கள், என்பவற்றின் நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | **2014** | | **2013** | | **முரண்** | |
|---|---|---|---|---|---|---|
| **கடன்களின் வகை** | **வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை** | **பெறுமதி** | **பெறுமதி அதிகரிப்பு/(குறைவு)** | **சதவீதம்** |
| | | ரூபா மில் | | ரூபா மில் | ரூபா மில் | % |
| ஈட்டுக் கடன்கள் | 1,603 | 1,393 | 1,330 | 1,218 | 175 | 14 |
| ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 7,975 | 2,875 | 6,011 | 2,140 | 735 | 34 |
| தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் | 2,422 | 292 | 1,537 | 157 | 135 | 86 |
| தனிப்பட்ட கடன்கள் | 2,452 | 1,149 | 1,599 | 747 | 402 | 54 |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 7 | 33 | 9 | 27 | 6 | 22 |
| மீள்நிதியிடல் | 585 | 197 | 1,774 | 277 | (80) | (29) |
| **மொத்தம்** | **15,044** | **5,939** | **12,260** | **4,566** | **1,373** | **30** |

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் கடன்களின மொத்தப் பெறுமதி போன்றன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 23 சதவீதம் மற்றும் 30 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

### 4.2.1 ஈட்டுக் கடன்கள்

ஈட்டுக் கடன்களை வழங்குவது தொடர்பில் பிரதான நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன் கையேட்டின் ஏற்பாடுகளுக்கு இணங்க வங்கியானது நிலுவையாக இருந்த தொகையை அறவிடுவதற்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் அவசியமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கடன் இலக்கம் | கடன் வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட கடன் தொகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 51/651/04/477 | 2012.12.13 | 850,000 | 421,475 |
| 1/700/01/325 | 2007.10.22 | 125,000 | 82,885 |
| 04/003/02/5353 | 2007.11.09 | 250,000 | 51,758 |

(ஆ) முன்னைய கடன்களின் நிலைமைகளை கருத்திற்கொள்ளாமல் கடன்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் இலக்கம் | கடன் வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட கடன் தொகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| HF 3484 | 2010/07/12 | 620,000 | 124,282 |
| 10/001/02/00135/BTA 041 | 2011/05/04 | 1,948,000 | 545,995 |

(இ) வாடிக்கையாளரால் காலாவதியான கடன் தொடர்பில் இன்னொரு வங்கியால் அனுப்பப்பட்ட கடிதத்தை கருத்திற்கொள்ளாமல் ரூபா 620,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கியானது வட்டி வீத மீளாய்வையும் கடன் கால நீடிப்பையும் பற்றி வாடிக்கையாளருக்கு அறிவித்திருக்கவில்லை.

| கடன் இலக்கம் | திகதி | வழங்கப்பட்ட கடன் தொகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 01-700-01-325 | 2007.10.22 | 125,000 | 82,885 |
| 04/003/02/5353 | 2007.11.09 | 250,000 | 51,759 |

(உ) ஈட்டுக் கடன்களிற்காக உடமையாக்கப்பட்ட அதிகமான ஆதனங்களின் பெறுமதி உரிய கடன்களின் நிலுவை மீதிகளை மேவுவதற்கு போதியதாக இருக்கவில்லை. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் இல | நிலுவையாக இருந்த முதல் தொகை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய மொத்த தொகை | ஆதனங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உருவாக்கப்பட்ட நட்டம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 6/31940/T6/869 | 262,500 | 1,098,018 | 850,000 | 248,018 |
| 18/58484/Y18/129 | 127,748 | 568,633 | 500,000 | 68,633 |
| 18/62583/Y18/383 | 176,248 | 710,640 | 300,000 | 410,640 |
| 7/62516/D7/435 | 150,000 | 555,862 | 350,000 | 205,862 |
| 12/61050/D12/210 | 132,841 | 500,879 | 407,200 | 93,679 |
| K/4/2929/KY2/813 | 598,404 | 598,404 | 275,000 | 323,404 |
| 10/54419/D10/213 | 99,455 | 547,799 | 300,000 | 247,799 |
| 1/32533/CD2/358 | 79,999 | 306,489 | 300,000 | 6,489 |
| 18/72939/Y18/923 | 50,834 | 226,985 | 200,000 | 26,985 |
| 6/4594/F6/137 | 299,997 | 719,201 | 200,000 | 519,201 |
| K/4/3186/KY3/289 | 138,409 | 415,325 | 250,000 | 165,325 |
| 5/43545/H6/524 | 255,030 | 551,886 | 300,000 | 251,886 |
| 61/K1A/26 | 8,919,111 | 19,677,458 | 13,000,000 | 6,677,458 |
| 2/01758/K2/427 | 252,659 | 675,433 | 500,000 | 175,433 |
| 2/643/POI/147 | 1,802,789 | 3,125,622 | 2,400,000 | 725,622 |
| 05/001/08/1773 | 507,058 | 1,212,692 | 800,000 | 412,692 |
| மொத்தம் | 13,853,082 | 31,491,326 | 20,932,200 | 10,559,126 |

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைவருக்கு வழங்கப்பட்ட கடன் அட்டை மூலம் செய்யப்பட்ட பொழுதுபோக்கு செலவினங்களை மீளளிப்பதற்கு திறைசேரியினுடைய அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டின் போது வங்கியால் ரூபா 564,772 கூட்டு மொத்தத் தொகையான பற்றுச்சீட்டுக்கள் மீளளிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013 செப்தெம்பர் 11 இன் பிஈடி 02/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக வங்கியால் அதன் ஊழியர்கள் சார்பாக ரூபா 12,885,149 கூட்டுமொத்த தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நல்லாளுக்கைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் அத்தியாயம் 8 இன் 8.3.8 ஆம் பந்தியின் படி, அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது கம்பகா மாவட்டத்தில் இனங்காணப்பட்ட வறுமை குடும்பங்களின் பகுதியளவில் கட்டப்பட்ட வீடுகளை திருத்தம் செய்வதற்கும் நிர்மாணம் செய்வதற்கும் ரூபா 1.5 மில்லியன் தொகை அரச சார்பற்ற அமைப்பிற்கு நன்கொடையளிக்கப்பட்டிருந்தது.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வில் பின்வரும் இனங்காணப்பட்ட நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடமையாக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனையில் ரூபா 984,312 தொகையான நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 584,757 தொகையான கடன் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டிருந்தன. மேலும், 2004 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 8,561,853 இணக்கம் செய்யப்படாத மீதியொன்று திறைசேரியிடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது நடைமுறைச்சொத்துக்களின் கீழ் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 இல் இருப்பு முகாமைத்துவத்திற்காக ரூபா 341,550 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளானது பயன்படுத்தப்படாமை காரணமாக குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியளவில் நிறைவேற்று தரமல்லாதோரின் அங்கீகரித்த பதவியணியின் 91 பதவிகள் அல்லது 35 சதவீதமான நிறைவேற்று தரத்திலுள்ள 05 பதவிகள் வறிதாக்கப்பட்டிருந்தனர். இதனால் வங்கியன் சுமூகமான செயற்பாடுகளை பாதகமாக பாதித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. அதேநேரம், மீளாய்வாண்டின் இறுதியளவில் ஏனைய வகையிலுள்ள 05 பதவிகள் மிகையாக இருந்தன.

## 5. கணக்களி தகைமையும் நல்ல ஆளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் போது 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் இலக்குகள் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ எய்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயல் குறியீடு | இலக்கு | எய்தல்களின் நிலைமை |
|---|---|---|
| நோக்கு 1 | கடன் கலவையை ரூபா 30 பில்லியனிற்கு அதிகரித்தல் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கலவையை ரூபா 24.27 பில்லியன் மாத்திரமே இருந்தது. |
| | ஒரு மாதத்திற்கு ரூபா 1,020 மில்லியனால் வைப்புக்கள் அதிகரித்தல | ஒரு மாத்தின் வைப்புக்களின் தேறிய அதிகரிப்பு இலக்கினை ரூபா 245 மில்லியன் அல்லது 24 சதவீதம் மாத்திரமேயாகும். |
| | சேவை நிலையங்கள் தாபித்தல் | 2014 திசெம்பர் 31 வரை எந்தவொரு சேவை நிலையங்களும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| நோக்கு 2 | இருக்கின்ற கிளைகளை நவீன கிளைகளாக திறத்தல் /தரமுயர்த்தல் | எந்தவெரு கிளையும் தரமுயர்த்தப்பட்டோ அல்லது திறக்கப்பட்டோ இருக்கவில்லை. |
| | சிறந்த தரக் கிளைகளாக இருக்கின்ற 4 கிளைகளை தரமுயர்த்தல் | எந்தவெரு கிளையும சிறந்த தரக் கிளையாக தரமுயர்த்தப்பட்டு இருக்கவில்லை. |
| நோக்கு 4 | வருமான விகித்திற்கு கிரயத்தை 25 சதவீதத்திலிருந்து 20 சதவீத்திற்கு முன்னேற்றுதல். | மீளாய்வாண்டின் போது 30 சதவீதமாக இருந்தது. |
| | வரிக்கு முந்திய இலாபத்தை ரூபா 660 மில்லியனிற்கு அதிகரித்தல் | 2014 திசெம்பர் 31 இல் இறுதியிலுள்ளவாறான வரிக்கு முந்திய இலாபமானது இலக்கின் ரூபா 412.71 மில்லியனாக அல்லது 62.53 சதவீதமாக இருந்தது. |
| நோக்கு 5 | 2014 அளவில் 1-2 நிலுவைகள் தவணைக்கட்டண ஈட்டுக்கடன்களின் வெளிப்படுத்தலை 28 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு குறைத்தல் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 1-2 நிலுவைகள் தவணைக்கட்டண ஈட்டுக்கடன்கள் வெளிப்படுத்தல்கள் 28 சதவீதமாக இருந்தது. |
| | தனிப்பட்ட மற்றும் வாகனக் கடன்களில் செயற்பாடற்ற கடன் விகிதங்கள் மற்றும் நிலுவையல்லா பூச்சிய நிலை என்பவற்றை பேணுதல். | தனிப்பட்ட மற்றும் வாகனக் கடன்களில் செயற்பாடற்ற கடன் விகிதங்கள் முறையே 15.63 சதவீதம் மற்றும் 8.65 சதவீதமாக இருந்தன. |
| நோக்கு 6 | 2014 இல் மொத்த கடன் கலவையை 8.4 பில்லியனால் அதிகரித்தல். | 2014 இற்கான கடன்கள் மற்றும் வருமதிகளின் வளர்ச்சி 13.5 சதவீதமாக மாத்திரமே இருந்ததுடன் மொத்த கடன் கலவையின் அதிகரிப்பானது 2.85 பில்லியன் மாத்திரமேயாகும். |
| நோக்கு 7 | புதிய குழு வங்கியியல் தீர்வொன்றுடன் சகல கிளை வலையமைப்பை ஒன்றிணைத்தல் | 2014 இல் எந்தவொரு புதிய குழு வங்கியியல் தீர்வும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | சகல கிளைகளிற்காகவும் ஏரீஎம் வலையமைப்பை அமுலாக்கல் | 2014 ஆம் ஆண்டில் ஏரீஎம் அலகுகள் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| நோக்கு 10 | வாடிக்கையாளர் பின்னூட்டல் அளவை கண்டுபிடிப்புகளில் தேசிய செயலமர்வை ஒழுங்கமைத்தல் | அத்தகைய செயலமர்வு எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 5.2 உள்ளகக் கட்டுப்பாடு

ஆவணப்படுத்தல் இன்மை காரணமாக இயக்குனர்களின் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறைகளை வலுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சரி பார்க்க முடியாதிருந்தது. ஆகையால் கடந்த மூன்று வருடங்களுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான இயக்குனர்கள் கூற்றின் பந்தியானது அழுத்தமாக்கப்பட்ட விடயங்களுடன் என்னால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக விரிவான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன், பதிலாக விரிவான வருமானம் மற்றும் செலவினங்களை கருத்திற்கொள்ளாமல் பொழிப்பாக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. பூரணத்துவமற்ற பாதீட்டின் படி, பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டன. எனவே, பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5.4 உள்ளக கணக்காய்வு

வங்கியின் வினைத்திறனான செயலாற்றலை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சிதிட்டத்தில் பட்டியல்படுத்தப்பட்ட அதிகமான விடயங்கள் உள்ளக கணக்காய்வால் மேவப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிப்பிரமாணம் 133 இற்கு இணங்க உள்ளக கணக்காய்வின் குறிக்கோள்களை அடைவதற்காக உள்ளக கணக்காய்வு பிரிவானது அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வினைத்திறனாக வழங்கியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கணக்கீட்டு பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(இ) கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை
(ஈ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு